[18th March 1959

SRI V. K. KOTHANDARAMAN : வருடா வருடம் போனஸ் விஷயமாக தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்கள் இலாகா அதிகாரிகள் தலையிட்டு ஒரு தீர்ப்பு சொன்ன போதிலும் அதை முதலாளிகள் ஒப்புக்கொள்வது இல்லை. ஆகவே அதற்கான திட்ட வட்டமான சட்டத்தை, லாபம் வந்தாலும் சரி நஷ்டம் வந்தாலும் சரி, இவ்வளவு சத விகிதம் போனஸ் கொடுக்கவேண்டுமென்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : லாபம் வந்தால் தான் போனஸ் கொடுக்கமுடியும். லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் போனஸ் கொடுக்கவேண்டும் என்பது சரியல்ல. அந்த நிலைமையில் கொடுப்பதாக இருந்தால் அது வேஜஸாய் போய் விடும்.

Cambodia Mills, Coimbatore

* 870 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the management of Cambodia Mills Coimbatore, imposed any condition of service on 1st July 1958 in violation of the general agreement regarding wages and work-load of textile workers signed on 25th September 1956; and

(*b*) the steps taken by the Government to compel the management to respect the agreement reached on 25th September 1956?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The management of Cambodia Mills, Limited, Coimbatore, gave notices on 31st May 1958 of their proposal to retrench 248 badlies on 1st July 1958, to transfer 328 workers to lower categories of occupation and to convert 279 permanent workers as badlies. The proposal of the management cannot however be said to be a violation of the agreement, dated 25th September 1956.

(*b*) Since the dispute could not be settled by conciliation by the Commissioner of Labour, Government discussed the matter with the parties. The Government also could not bring about a settlement. The dispute was therefore referred for adjudication to the Industrial Tribunal, Madras. The parties however came to an agreement subsequently and an award was given by the Industrial Tribunal on the lines of the agreement.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களை கீழே வேறு வேலைக்கு மாற்றப்பட்டாலும் அவர்களுடைய கூலி விகிதத்தை குறைக்காமல் இருக்கும்படியான நிலைமையில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : This matter has been settled and an award in terms of the agreement between the parties has been given. Therefore, the Government have no information on these matters.

Rubber

* 871 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Forest Department have decided to take up the cultivation of rubber in the Kanyakumari district; and

18th March 1959]

(b) if so, the steps taken so far to implement the decision?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The question of raising a rubber plantation is under examination.

* 872 Q.—**SRI A. VEDARATHNAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ரப்பர் தோட்டங்கள் எங்கெங்கே இருக்கின்றன ?

(ஆ) எங்கேனும் ரப்பர் தோட்டங்கள் உண்டாகக்கூடிய வசதி உண்டா ?

(இ) ரப்பர் அபிவிருத்திக்கான முயற்சி ஏதேனும் நம் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

(ஈ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

(உ) செயற்கை ரப்பர் உற்பத்தி விஷயமாய் அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rubber is grown in Coimbatore, Kanyakumari, Madurai, Salem and the Nilgiris districts.

(b) Yes, Sir. There are facilities to cultivate rubber in the Kanyakumari district.

(c) & (d) The question of bringing additional area under cultivation is being examined by the Government. Details have not yet been worked out.

(e) No, Sir.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether it is a fact that the yield per acre in Kanyakumari district is the highest in the whole of India and if so, will the Government take immediate steps to start a rubber plantation there at once?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information whether it is the highest there. But, nevertheless, we are taking steps to have a plantation of rubber in Kanyakumari.

SRI A. VEDARATHNAM : தேக்கு மரங்களை சாகுபடிக்கு எடுத்துக் கொள்வது போன்று ரப்பர் சாகுபடி விஷயத்திலும் அப்படிப்பட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ? அப்படியானால் ஏராளமான ரப்பர் மரங்களை பயிரிடுவதற்கும் அப்படி பயிரிட்டு அதை பயன்படுத்திக்கொள்ளவும் இந்த அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரப்பர் பயிர் செய்வதற்கு என்று சில ப்ளான்டேஷன் எஸ்டேட்டுகளை அமைக்க வேண்டியதாக இருக்கிறது. தேக்கு மரங்களை எங்கு வேண்டுமானாலும் வழி நெடுக ஆற்றங்கரையில் நட்டுக் கொண்டு போய் விடலாம். அப்படி ரப்பர் மரங்களை நடமுடியாது. அப்படிப்பட்ட எஸ்டேட்டுகள், அதாவது ரப்பர் மரங்களை நடக்கூடிய எஸ்டேட்டுகள் கன்யாகுமரியில் இருக்கிறது. அங்கே 3,500 சொச்சம் ஏக்கர் இருக்கிறது. அந்த இடத்தில் ரப்பர் ப்ளான்டேஷன் வைக்கலாம். அங்கே 3,000 ஏக்கரில் ரப்பர் ப்ளான்டேஷனும் செய்யப்பட்டிருக்கிறது.